பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

26 12 2024 THURSDAY 7.15 PM

ஆகாஷவாணி

## தலைப்புச் செய்திகள்

- நாடு முழுவதும் மூன்று லட்சம் கிராமங்களில் சொத்து ஆவணங்கள் தொடர்பான ட்ரோன் கணக்கெடுப்பு பணிகள் 92 சதவீதம் நிறைவடைந்திருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- பேரிடர் எச்சரிக்கையை வழங்குவதில் இந்தியா உலக அளவில் முன்னோடி நாடாக திகழ்கிறது என்று மத்திய அமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.
- ராஜஸ்தான் உயர்நீதிமன்றம் உட்பட நான்கு உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்துக்கு உச்சநீதிமன்ற கொலிஜியம் பரிந்துரை செய்துள்ளது.
- தில்லி, ராஜஸ்தான், உள்ளிட்ட வட மாநிலங்களில் அடுத்த இரு தினங்களுக்கு அடர்ந்த பனி மூட்டம் நீடிக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- விஜய் ஹசாரே கோப்பைக்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தமிழக அணி 114 ரன் வித்தியாசத்தில், உத்தரப்பிரதேச அணியை வென்றது.

<<<<<>>>>>

நாடு முழுவதும் மூன்று லட்சம் கிராமங்களில் சொத்து ஆவணங்கள் தொடர்பான ட்ரோன் கணக்கெடுப்பு பணிகள் 92 சதவீதம் நிறைவடைந்திருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

நவீன தொழில்நுட்ப உதவியுடன் கிராமப்புற நில அளவை, வரைபட தயாரிப்பு திட்டத்தின்கீழ், 58 லட்சம் சொத்து அட்டைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக மத்திய அரசின் அறிக்கை தெரிவிக்கிறது.

இலக்கு நிர்ணயிக்கப்பட்ட கிராமங்களில் டிஜிட்டல் முறையிலான சொத்து அட்டைகள் கணக்கெடுக்கும் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இரண்டு கோடியே 20 லட்சம் இத்தகைய அட்டைகள் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

கிராமங்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு, அவர்களின் உரிமை பதிவுகளை வழங்குவதன் மூலம், கிராமப்புற இந்தியாவின் பொருளாதாரம் மேம்படுத்தப்படும் என்ற அடிப்படையில் Svamitva என்னும் திட்டம் ஏற்கனவே தொடங்கப்பட்டு நடைமுறையில் உள்ளது

சொத்து தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வுகாணுதல், சொத்து வரியை சிறந்த முறையில் மதிப்பீடு செய்வதற்கான வசதி, விரிவான கிராம அளவிலான திட்டமிடல் போன்றவற்றுக்கு இந்த அட்டைகள் பெரிதும் உதவும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

பேரிடர் எச்சரிக்கையை வழங்குவதில் இந்தியா தற்போது உலக அளவில் முன்னோடி நாடாக திகழ்கிறது என்று மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று சுனாமி 20-ஆண்டு நினைவு தினத்தையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில், பேசிய அவர், பேரிடர் எச்சரிக்கை தொடர்பான சேவைகளை பல்வேறு உலக நாடுகளுக்கும் இந்தியா வழங்கி வருவதாக கூறினார்.

கடல்சார் ஆராய்ச்சி மற்றும் பேரிடர் தயார் நிலையில் நாட்டில் ஏற்பட்டுள்ள பல்வேறு முன்னேற்றங்கள் குறித்து அவர் எடுத்துரைத்தார்.

உலக தரத்திலான பேரிடர் எச்சரிக்கை கருவிகளை வழங்கும் நாடாக இந்தியா உருவாகியிருப்பதாகவும் பாதுகாப்பான மற்றும் ஸ்திரத்தன்மையுடன் கூடிய அறிவியல் முன்னேற்றங்களில் முக்கிய பங்கினை இந்தியா ஆற்றிவருவதாக திரு ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

<<<<<>>>>>

வஃக்ப் சட்டத்திருத்த மசோதா தொடர்பான நாடாளுமன்ற கூட்டுக்குழு இன்று கர்நாடகா உள்ளிட்ட மூன்று மாநிலங்களின் உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தியுள்ளது

கர்நாடகா, ராஜஸ்தான், மத்தியப்பிரதேச மாநிலங்களின் சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர்கள் மற்றும் வருவாய்த்துறை செயலாளர்களுடன் நாடாளுமன்ற கூட்டுக்குழு உறுப்பினர்கள் விரிவான ஆய்வு மேற்கொண்டனர்.

இந்த மாநிலங்களில் வக்ஃப் வாரியத்துக்கு சொந்தமான பதிவு மற்றும் பதிவு செய்யப்படாத சொத்துக்களின் தற்போதைய நிலை குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தனர்.

கூட்டத்திற்கு பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய கூட்டுக்குழுவின் தலைவர் திரு ஜெகதாம்பிகா பால், இந்த மாநிலங்களின் பிற அமைப்புகள் மற்றும் அரசு உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்திய பின்னர், மேற்குவங்கம், பீகார் மற்றும் உத்தரப்பிரதேச மாநிலங்களுக்கு பயணம் மேற்கொள்ள இருப்பதாக தெரிவித்தார்.

கொல்கத்தா, பாட்னா, லக்னோ உள்ளிட்ட நகரங்களில் ஏற்கனவே சுற்றுப்பயணம் மேற்கொண்டிருப்பதாகவும், ஜம்மு காஷ்மீருக்கு பயணம் மேற்கொள்ள திட்டமிட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

<<<<<>>>>>

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் மற்றும் Aksai Chin பகுதிகள் இடம்பெறாத வரைபடத்தை காங்கிரஸ் கட்சி வெளியிட்டிருப்பதற்கு பிஜேபி கண்டனம் தெரிவித்துள்ளது

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி செய்தித்தொடர்பாளர் திரு சுதான்ஷு திரிவேதி, இதேபோன்ற தவறான வரைபடத்தை காங்கிரஸ் கட்சி முந்தைய காலங்களில் வெளியிட்டதை சுட்டிக்காட்டினார்.

இதன்மூலம், இந்தியாவை பிளவுபடுத்த முயலும் சக்திகளுடன் காங்கிரஸ் கட்சி தொடர்பு வைத்திருப்பதுதெரிய வந்துள்ளதாகவும் திரு சுதான்ஷு திரிவேதி கூறினார்.

<<<<<>>>>>

உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சஞ்ஜீவ் கண்ணா தலைமையிலான கொலிஜியம், நான்கு உயர்நீதிமன்றங்களில் நீதிபதிகளை நியமிப்பதற்கு பரிந்துரை செய்துள்ளது.

கடந்த 22-ஆம்தேதி நடைபெற்ற உச்சநீதிமன்ற கொலிஜியத்தின் கூட்டத்தில் ராஜஸ்தான் உயர்நீதிமன்றம் அனுப்பிய மூன்று நீதிபதிகளை நியமிப்பதற்கு ஒப்புதல் அளித்திருப்பதாக உச்சநீதிமன்றத்தின் அறிக்கை தெரிவிக்கிறது.

மேலும், மும்பை உயர்நீதிமன்றத்துக்கு ஒரு நீதிபதியும், அலகாபாத் உயர்நீதிமன்றத்துக்கு ஒரு நீதிபதியும், உத்தராகண்ட் உயர்நீதிமன்றத்துக்கு ஒரு நீதிபதியும் நியமனம் செய்வதற்கு ஒப்புதல் அளித்திருப்பதாக அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கிறது.

<<<<<>>>>>

ஆப்கானிஸ்தான் மீது தாக்குதல் நடத்துவதற்கு முன்பாக முந்தைய வரலாற்றிலிருந்து பாகிஸ்தான் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும் என்று ஆப்கானிஸ்தான் வெளியுறவுத்துறை அமைச்சர் திரு அமீர்கான் Muttaqi தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தான் நடத்திய வான்வழி தாக்குதலில் ஆப்கானிஸ்தானில் 46 பேர் உயிரிழந்த நிலையில், இந்த எச்சரிக்கையை அவர் வெளியிட்டுள்ளார்.

எந்தவொரு ஆக்கிரமிப்பையும் ஆப்கானிஸ்தான் பொறுத்துக்கொள்ளாது என்றும், பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் தங்களது கொள்கையை மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சோவியத் யூனியன் மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளின் முந்தைய வரலாற்று சம்பவங்களை பாகிஸ்தான் கவனத்தில் கொண்டு செயல்பட வேண்டும் என்றும் திரு அமீர்கான் கூறியுள்ளார்.

<<<<<>>>>>

கூட்டுறவுத்துறை மற்றும் அதன் உறுப்பினர்களின் சேமிப்புகளை திரும்ப அளிப்பது தொடர்பான விதிகளில் திருத்தம் செய்து, புதிய கூட்டுறவு சட்டத்தை நேபாள அரசு கொண்டுவந்துள்ளது.

இந்த சட்டத்தை அந்நாட்டு அதிபருக்கு அரசு அனுப்பி வைத்துள்ளது.

நேபாள கூட்டுறவு மேம்பாட்டு வாரியத்தை கலைத்துவிட்டு, புதிய கூட்டுறவு நிறுவனங்கள் முறைப்படுத்தும் சட்டம் தொடர்பான முடிவு Singhdurbar என்ற இடத்தில் நடைபெற்ற அமைச்சரவை கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

கூட்டுறவு நிறுவனங்கள் குறித்து விசாரணை நடத்திய நாடாளுமன்றக்குழுவின் பரிந்துரையின்பேரில் இந்த முடிவு எடுக்கப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<>>>>>

தலைநகர் தில்லியில் காற்றின் தரம் இன்று மேலும் மோசமடைந்து காணப்பட்டது.

பிற்பகலில் காற்றின் சராசரி தரக்குறியீடு 342 என்ற அளவில் பதிவானதாக மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் தெரிவித்துள்ளது.

ஒரு சில இடங்களில் இந்த குறியீடு 350 என்ற அளவை தாண்டியதாகவும், தில்லி நேரு நகர் பகுதியில் 397-ஆகவும், ஆனந்த் விஹார் பகுதியில் 386-ஆகவும் தரக்குறியீடு பதிவானதாக அந்த வாரியம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, ராஜஸ்தான், தில்லி, இமாச்சலப்பிரதேசம், உள்ளிட்ட வட மாநிலங்களில் கடும் குளிர் மற்றும் மூடுபனி நீடித்து வருகிறது.

அடுத்த சில தினங்களுக்கு இதே நிலை தொடரும் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

தில்லி மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் அதிகாலை நேரங்களில் பனிப்பொழிவு நீடிக்கும் என்றும் அந்த மையம் கூறியுள்ளது.

இந்நிலையில், தென்மேற்கு மற்றும் அதனையொட்டிய மத்திய மேற்கு வங்கக்கடலில், தெற்கு ஆந்திரா - வடதமிழக கடலோர பகுதிகளில் நிலவிய ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று காலை வலுவிழந்ததாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக, தமிழகம் மற்றும் புதுச்சேரியில் அடுத்த ஆறு நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அந்த மையம் கூறியுள்ளது

சென்னையை பொறுத்தவரை அதிகாலை நேரங்களில் லேசான பனிமூட்டம் காணப்படும் என்றும், ஓரிரு இடங்களில் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் வானிலை மையம் தெரிவித்துள்ளது.

<<<<<>>>>>

### *விளையாட்டுச் செய்திகள்*

விஜய் ஹசாரே கோப்பைக்கான ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் தமிழக அணி 114 ரன் வித்தியாசத்தில், உத்தரப்பிரதேச அணியை வென்றது.

விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற இப்போட்டி மழை பாதிப்பு காரணமாக 47 ஓவராக குறைக்கப்பட்டது.

இதில் முதலில் பேட் செய்த தமிழக அணி 5 விக்கெட் இழப்பிற்கு 284 ரன் எடுத்தது.

பின்னர் பேட் செய்த உத்தரப்பிரதேச அணி 32 புள்ளி ஐந்து ஓவரில், 170 ரன் மட்டுமே எடுத்து ஆட்டமிழந்தது.

---------------

உலக Rapid மற்றும் Bilitz சாம்பியன் போட்டி நியூயார்க்கில் இன்று தொடங்குகிறது.

இந்தியாவின் சார்பில் ஆடவர் பிரிவில் அர்ஜுன் எரிகேசி, பிரக்யானந்தா, அரவிந்த் சிதம்பரம் உள்ளிட்ட 10 பேரும், மகளிர் பிரிவில் Koneru Humpy, Vaishali, Harika Dronavalli உட்பட 8 பேரும் இதில் பங்கேற்கின்றனர்.

-----------------

நேபாள் சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Meiraba Luwang Maisnam பட்டம் வென்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் அவர், 21-17, 21-16 என்ற செட் கணக்கில், இந்தியாவின் Rahul Bharadwaj –ஐ வென்றார்.

-----------------

இந்தியாவுக்கு எதிரான நான்காவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் டாஸ் வென்று முதலில் பேட் செய்துவரும் ஆஸ்திரேலியா, முதல் இன்னிங்சில் ஆட்டநேர இறுதியில் 6 விக்கெட் இழப்பிற்கு 311 ரன் எடுத்துள்ளது.

<<<<<END>>>>>